

மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.





இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 5


- சரியான பாதையில் செல்லுதல்
- அரசியை வரவேற்றல்
- கொதி நிலையிலுள்ள வெப்ப வாயுவைப் பீச்சி அடிக்கும் வண்டு.
- அத்திமரத்தின் உவமையும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்
- வாய்ப்புகளை நழுவ விடாதே

### கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேரான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# சரியான பாதையில் செல்லுதல்

நமக்கு முன் மக்கள் பலர் நடந்து சென்ற ஒரு பாதையில் செல்லுதல் மனதுக்கு இதமான ஓர் அனுபவமாகும். நாம் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறோம் என்ற உணர்வைத் தருகிறது. இந்த வழித்தடம் பயன்தரும் ஓரிடத்திற்குத் தான் செல்கிறது. இல்லையென்றால், நமக்கு முன் இப்பாதையில் சென்றவர்கள் முட்டாள்தனமாகத் தான் சென்றிருக்கிறார்கள் என நினைக்கத் தோன்றும் ஆகவே தான் எல்லாரும் போகிற வழியில் நாமும் போவது நல்லது என நமக்கு எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் நமக்கு முன் சென்றவர்கள் எல்லாருமே தப்பாக வழிநடத்தப்பட்டு, தப்பாகவே சென்றிருக்கிறார்களென்றால் என்ன செய்வது ? எல்லாருமே தவறான பாதையில், தவறான திசையில் சென்றிருக்கிறார்களென்றால் என்ன செய்வது ?

### எல்லாரும் வழி தப்பினர்.

வாசகர்களுக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும். ஆனால் நம்மில் ஒவ்வொருவருமே இலக்கைத் தவறவிட்டு பாதையினின்று நீங்கி, எங்கோ வழிதப்பிப் போய்விட்டோம். ஒவ்வொருவரும்! என்று வேதாகமம் கூறுகிறது. அதற்கான சான்று இதோ இங்கே.




நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி..... நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது; சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். (ரோமர் 3:10-17)

"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்." (நீதிமொழிகள் 14:12)

"விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்" (நீதிமொழிகள் 21:16)

### புரிந்து கொள்ள மனதை சாய்த்தல் ?
### (அல்லது) புரிந்து கொள்ள இணங்குதல்

தேவனால் உந்தப்பட்டு நீதிமொழிகள் புத்தகத்தை எழுதிய ஞானி, நம் இஷ்டத்திற்கு விடப்பட்டால், நாம் போக விரும்பும் வழி சரியாகப் புரிந்து கொண்டால்

நாம் போகவேண்டிய வழி ஆகிய இரண்டிற்கும் உள்ள முக்கியமான வேறுபாட்டைக் காண்பதைக் கவனி. மனிதன் சாதிக்கத் தவறிய காரியங்களை வரிசைப்படுத்தி பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகையில், வேதவாக்கியங்கள் முழுவதிலுமிருந்து சங்கீத புத்தகம், நீதிமொழிகள், ஏசாயாவின் தீர்க்கதரிசனம் ஆகியவற்றிலுமிருந்தும், தன் கூற்றுக்கான சான்றுகளைச் சேகரித்துத் தருகிறார்.

தேவனுடைய பிரமாணத்தை (கட்டளையை) முழுவதுமாக, அப்படியே ஏற்று, அவருடைய கற்பனைகளின் வழியிலே கீழ்ப்படிந்து நடப்பதைத்தெரிந்து கொள்வதனால், சரியான பாதையில் நடப்பதை வேதாகமம் முழுவதிலும் ஒருவர் கூடத் தெரிந்து கொள்ளவில்லை என்பது தான் துக்கமான செய்தி. தேவனுடைய கற்பனையைத் தவிர வேறு எதையும் செய்வார்கள். இன்றும் அதே போலத் தான் இன்னும் முன்பைவிட அதிகமாக என்று சொல்லலாம். நாமெல்லாருமே நம் சொந்த வழியில் செல்லத்தான் மனதுடையவர்களாயிருக்கிறோமே தவிர, தேவனுடைய வழியில் செல்லஅல்ல.

**'வழி'**

முதல் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களின் வாழ்க்கைப் போக்கின் திசையில் ஒரு முழு மாற்றம் இருந்தது என்பது காட்டப்பட்டது. ஏனெனில் அப்படி பின்பற்றியவர்கள் ''அந்த ஒரே வழியை'' ஆதரிப்பவர்கள் என அறியப்பட்டார்கள். அப்போஸ்தலர் நடபடிகளில் அடிக்கடி இந்த வார்த்தையைப் பார்க்கிறோம்.

"உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன். அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே (வழியின்படியே) எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து, நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புத்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசிக்கிறேன்" (அப் 24:14)

தங்களைப் பற்றிச் சொல்லிக்கொள்ள ஆதிவிசுவாசிகள் ஏன் அந்த வழியைத் தெரிந்துக் கொண்டார்கள்? அவர்களின் வாழ்க்கைக்கென புதிய மார்க்கத்தை (திசையை) அவர்கள் தெரிந்து கொண்டதினால் - இனிமேல் மக்கள் கூட்டத்தின் பின்னால் செல்வதில்லை ஆனால் முற்றிலும் மாறுபட்ட பாதையில் செல்வது: வாழ்க்கையின் பொதுவான போக்கையே திருப்பிவிட்ட ஒருவர், வாழ்க்கையின் புதிய வழி ஒன்றை முன்னே சென்று காட்டிய ஒருவர் வந்தார். தேவனுடைய வல்லமையினால் அவருடைய பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளிடம் பிறந்த இயேசு கிறிஸ்துவினால் இப்புதிய மார்க்கம் பிறந்தது. பரிபூரண கீழ்ப்படிதலின் பாதையினின்று இயேசு ஒரு தடவை கூட திசைமாறி செல்லவில்லை. அவர் எப்போதுமே தேவனுடைய சித்தத்தையே செய்தார். எல்லாக் காரியங்களிலேயும் அவர் முழுமையாய்க் கீழ்ப்படிந்தார்.

**புதிதும் ஜீவனுமான மார்க்கம் (வழி)**

நித்திய மரணத்தில் முடிவடையும் மனிதனுக்குச் செம்மையாய் தோன்றுகிற தமக்கு முன்னே சென்றவர்கள் நடந்த, கீழ் நோக்கிய பாதையைத் தெரிந்து கொள்வதற்குப் பதில், இயேசுவானவர் ஜீவனுக்கு நேராகச் செல்லும் மேல் நோக்கிய



பாதையைத் தெரிந்து கொண்டார். அத்தகைய வாழ்க்கை முறை, பின் வந்த நாட்களில் ''புதிதும் ஜீவனுமான மார்க்கம்'' (எபிரேயர் 10:20) என்றழைக்கப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதற்கு முன்பு நிகழ்ந்த அனைத்தையும் விட, முற்றிலும் மாறுபட்டது அது. இயேசுவின் சொற்களையும், செயல்களையும் படிப்பதற்கென சுவிசேஷங்களில் கூறப்பட்டவைகளை வாசியுங்கள். அங்கே மற்ற எவரையும் விட வித்தியாசமான ஒருவரைச் சந்திப்பீர்கள். ஏனெனில் மெய்யாகவே இயேசுவானவர் தனித்தன்மை வாய்ந்தவர். அவரின் சாதனைகளுக்கு முன் நிற்கத் தகுதி பெற்ற மனித முயற்சி எதுவுமே கிடையாது.

ஒருமுறை, தேவன் எப்படிப்பட்டவர் என்பதைத் தங்களுக்குக் காட்டும்படி அவருடைய சீஷர்கள் கேட்டார்கள். அவர்கள் மத்தியில் அவர் வாழ்ந்த விதத்தை அவர்கள் சிந்தித்துப் பார்த்தாலே தேவன் எப்படி இருப்பார் என அவர்கள் மிகச் சரியாகத் தெரிந்து கொள்ளலாம் என இயேசு பதில் கொடுத்தார். ஏனெனில் அவர்கள் மத்தியில் இயேசு, தேவனின் ஜீவியத்தை வாழ்ந்து காட்டினார்.

"நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்." (யோவான் 14:10,11)

**ஒரே மார்க்கம் (வழி)**

பிதாவுக்கும் குமாரனுக்குமிடையே இருந்த பிணைப்பு எப்படிப்பட்டதென்றால், ஒருவர் கூறுவதைக் கேட்பது அடுத்தவர் கூறுவதைக் கேட்பதற்குச் சமம். ஒருவரின் செயலைக் காண்பது, அடுத்தவர் எதைச் செய்யத் தெரிந்து கொள்வார் எனக் காண்பது போலாகும். அவர்களது ஒருமைப்பாடு பரிபூரண ஒருமைப்பாடு ஆகும். நம் வாழ்க்கையின் சந்தர்ப்ப சூழ்நிலைகளில், தேவனுடைய சித்தத்திற்கேற்ப நம்மை அமைத்துக் கொள்கையில், நாம் அதே விதமான ஒருமைப்பாட்டைப் பெற முயல வேண்டும் என இயேசு கூறினார். (யோவான் 17:21 காண்க)

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:16) என இயேசு தோமாவினிடத்தில் கூறியதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தும் பாதையை நாம் காண விரும்பினால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு ஒரு ஜீவனுள்ள தொடர்பு நமக்கு இருக்க வேண்டும். மேலும் அவருடைய வழியைப் பின்பற்றவும் நாடவேண்டும்.

அவர் சிலுவையில் அறையப்படவேண்டும் என மக்கள் கூட்டம் சத்தமிட்டபொழுது, மக்கள் கூட்டம் செய்தது தவறு.

வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிப்பதற்கான தருணமாகக் கொண்டு, சுயத்தை திருப்தி செய்யும் இன்றைய மக்கள் கூட்டமும் தவறு தான் செய்கிறது.

இயேசு தெரிந்து கொண்ட வழியே, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாதை - அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது.

# அரசியை வரவேற்றல்

ஏறத்தாழ பத்துலட்சம் பார்வையாளர்கள், ஈரமும் மூடுபனியுமுள்ள ஓர் நாளில், சௌதாம்ப்ற்ன் துறைமுகத்தில் மேரி ராணி 2 என்ற கப்பலை வரவேற்க காத்திருந்தனர்.

பிரிட்டிஷ் கொடி பறக்கும் QM2 தான் ஆழ்கடலில் செல்லும் மிகப்பெரிய கப்பல் - 150,000 டன் எடையுள்ள இக்கப்பல் 345 மீட்டர் நீளமுள்ளது. 2,600 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இக்கப்பலைக் கட்டி முடிக்க 550 மில்லியன் பவுண்டுகள் செலவானது. அதை ஒரு கப்பல் என்று சொல்வதைக் காட்டிலும், "மிதக்கும் நகரம்" என்று சொல்வது பொருத்தமாயிருக்கும்.

### எல்லாமே இன்னொன்றோடு சார்புடையது

மேலே கூறப்பட்ட அதிகமான அளவுகள், எடைகள் உங்களுக்குப்



பழக்கமானவை இல்லையென்றால், அவற்றின் முக்கியத்துவம் பற்றி நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள். இந்தக் கப்பலின் படம், அது எவ்வளவு பெரியது என்பது பற்றி ஓரளவு தெரிவிக்கலாம். ஆகவே க்யூனார்டு என்ற கப்பல் உரிமையாளர்கள் நமக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் தந்து உதவுகிறார்கள்.

ஐஃபிலில் கோபுரத்தின் உயரத்தை விட இந்தக் கப்பல் நூறு அடி நீளம் அதிகமானது. இதை நயாகரா அருவியின் அடியில் மிதக்கவிட்டால், அதன் அடிபாகம் அருவி விழும் விளிம்பிற்கு இருபது அடி மேலே இருக்கும். கப்பலின் விசில் சத்தம் 10 மைல் தொலைவிற்குக் கேட்கும்.

### எல்லாமே கிடைக்கிறது

நீங்கள் இந்தக் கப்பல் வெள்ளோட்டம் விடப்படும் போது, சௌதாம்ப்டனிலிருந்து ஃப்ளாரிடாவுக்குப் பயணம் செய்யவிரும்பி, அதற்கு வேண்டிய பணமும் வைத்திருந்தீர்களென்றால், உங்களுக்குத் தேவையானது எல்லாமே கப்பலில் கிடைக்கும். அதற்கு மேலும் கிடைக்கும். அதில் 1300 அறைகள் இருப்பதோடு, உணவு விடுதிகள், கடைகள், உடல் மேம்பாட்டு மையம், ஐந்து நீச்சல் குளங்கள்,



உடற்பயிற்சி மையம், சினிமா, ஒருகோள் உற்றுநோக்கம் (Planetarium) கூட அங்கு உண்டு. பயணிகள் ஆடம்பரமாகக் கடலில் பயணிக்கும் போது ரசித்து அனுபவிக்கக் கூடிய ஓய்வுநேரம் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் எல்லாமே ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

கணினியில் ஆற்றல்கள், மொழிகள், கலை, சமையல் ஆகிய பல்வேறு பாடங்களைத் திறம்படப் போதிக்கும் "கடலில் கல்லூரி" போன்ற பல்வேறு செயல்பாடுகள் இக்கப்பலில் நடைபெறுகின்றன. QM2ல் ஒரு பெரிய நூலகமும் ஒரு புத்தகக்கடையும் உண்டு. ஒரு உண்மையான நடன அரங்கமும் இசைக்குழுவும் ஆயத்தமாயிருப்பதைக் குறித்துப் பெருமைப் பட்டுக்கொள்ளுகிறது. பல உடல்தகுதி மற்றும் ஆரோக்கியம், ஓய்வு ஆகியவற்றிற்கான மையங்களும் உண்டு.

### ஒன்று தேவைப்படுகிறது

சில சமயங்களில் நாம் சற்றே நின்று நம் சொந்த வாழ்க்கையை நிதானித்துப் பார்க்கவேண்டியுள்ளது. மேரி ராணி கப்பல் சௌதாம்ப்றன் வந்ததும் நமக்கு இத்தகைய தருணம் ஒன்றை அளிக்கிறது. மனித சந்தோஷத்திற்கும் மன நிறைவிற்கும் என்னவெல்லாம் தேவையென நினைக்கிறோமோ, அவை அனைத்தையும் சேர்த்து இந்தப் பெரிய கப்பலில் வைத்திருக்கிறார்கள். கட்டணத்தைச் செலுத்தி, பயணத்தை ரசித்து அநுபவிக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆனால் சந்தோஷமானதும் நிறைவானதுமான வாழ்க்கையில் இவைதான் உள்ளனவா ?

இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் ஒரு குடும்பம் வரவேற்று உபசரித்துக்கொண்டிருந்தது. இவர்களை விரும்பி அழைத்த இரு சகோதரிகளும் செய்வதற்கு நிறைய வேலைகள் இருந்தன. விருந்து உணவு சமைப்பதிலும் பிற ஒழுங்குகளைக் கவனிப்பதிலும் இருவரில் ஒருத்தி மும்முரமாயிருந்தாள். அவள் சகோதரியோ இயேசுவோடு அமர்ந்து, அவர் சொல்வதைக் கேட்டு, அவரிடம் கற்றுக்கொண்டிருந்தாள். ஆகவே மார்த்தா இயேசுவிடம் எதிர்ப்பு தெரிவித்தாள். மரியாளின் உதவியுடன் தான் வேலை செய்யவேண்டுமென்று கூறினாள். உடனே ஆண்டவர் "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" (லூக்கா 10:41,42).

அவர் கூற விரும்பிய கருத்து யாதெனில், வழக்கமாக செய்யப்படவேண்டிய வேலைகள் செய்யப்படவேண்டுமென்றாலும், நாமெல்லாருமே செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்களை அலட்சியப்படுத்தி விட்டுவிடக் கூடாது என்பதுதான். ஆனால் வெகு சிலரே முக்கியமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இயேசு வந்திருக்கிற சமயம் அவரோடு நேரம் செலவழித்து, அவருடைய வருகையினால் அதிக நன்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று மரியாள் அறிந்திருந்தாள். அவளும் கூட சமயலறையில் மும்முரமாய் வேலை செய்திருக்கலாம். அல்லது தன்னளவில் தனியே சந்தோஷமாயிருந்திருக்கலாம். ஆனால் அப்போதும், இப்போதும் இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்வது மிக மிக அவசியமானதும், முக்கியமானதும் ஆகும்.

**ராஜா வருகிறார்**

ராஜா தனது சொந்த நகரத்திற்கு வரும்போது, அவரை வாழ்த்தி வரவேற்க பத்து லட்சம் பேருக்கும் மேலாக மக்கள் கூடுவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எருசலேமுக்கு வரப்போகிறார். அறிகுறிகள் என்னவெனில் அந்த சமயத்தில் மூடுபனியோ, ஈரமோ இருக்காது. ஒரு புதிய நாள் உதயமாவதாயிருக்கும். வெகு காலத்திற்கு முன் தாவீது ராஜா அதை வர்ணித்திருக்கிறார் "அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து... சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப் போல இருப்பார்" (2. சாமுவேல் 23:4).

''தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும்'' (2. தெசலோனிக்கேயர் 1:9) இயேசு வரும்போது, இந்த வாழ்க்கையில் எது நமது உண்மையான தேவை என்பது தெளிவாகும். சர்வ வல்லமையுள்ள தேவனோடு நமக்கு சரியானதோர் உறவும் தொடர்பும் இருக்கவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலும், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதாலும் இப்போது இது சாத்தியமாகிறது. அவருடைய ரட்சிக்கும் நாமத்தில், நீரில் மூழ்கி எடுக்கும் ஞானஸ்நானமும் கீழ்ப்படிய வேண்டிய கற்பனைகளில் ஒன்று.

**பரலோகத்திலிருந்து வரும் பட்டணம்**

புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமாகிய ''இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தல்'', கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு நேராய் நடத்தும் சம்பவங்களை நேர்த்தியான படங்கள் போலக் காட்டுகிறது. தேவனுடைய மகத்தான நோக்கம் நிறைவு பெறும் காலத்தில், தேவனுடைய ராஜ்யம் மீண்டும் பூமியில் தோற்றுவிக்கப்படும் விதம் குறித்து யோவானுக்குச் சொல்லப்படுகிறது. வரப்போகும் மாற்றம் வார்த்தைப் படங்களால் காட்டப்படுகிறது.

தேவனுடைய ராஜ்யத்தினால் மனிதருடைய ராஜ்யங்கள் வீழ்த்தப்படும் காலத்திற்கு தேவன் நன்கு ஆயத்தப்பட்டிருக்கிறார். அந்த சம்பவம் உலகத்தை மனித குலம் வாழ்வதற்கேற்ற வாழிடமாக மாற்றும். தேவனுடைய மகிமை மேற்கொள்ளும். அனைத்தும் அவருக்கு கனத்தையும் துதியையும் செலுத்தும். அந்த வருகையின் நேரத்தின் போது, சாவாமையும், தெய்வீக ஆசீர்வாதங்களும் மேற்கொண்டு நிலைநிற்பது தான் பரலோகப் பட்டணமாகிய "புதிய எருசலேமின்" வருகை என வர்ணிக்கப்படுகிறது.

"....பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது; அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்; தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 21:2,3).

ஒரு பெரிய கப்பல் துறைமுகத்திற்குள் வருவதுபோல, நமக்குத் தேவையான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தேவனுடைய ராஜ்யம் எருசலேமுக்கு வரும் ஒரு ஆயிர வருடகாலப் பயணத்தை ஆரம்பிக்கும். அச்சமயம் நமக்குத் தெரிந்த எல்லாமே தோற்றுப் போகும். தேவனே தமது படைப்பில் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருப்பார். ராஜாவை வரவேற்பதற்கு இதுவே ஏற்ற தருணம்.



**"தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும்" யோபு 37:14**

# கொதி நிலையிலுள்ள வெப்ப வாயுவைப் பீச்சி அடிக்கும் வண்டு.



இங்கு காணப்படும் வண்டு, தன் வால் பகுதியிலுள்ள சுழலும் இரு குழாய்கள் மூலம், தன் பகைவரின் மீது 212 (பாரன்ஹைட்) வெப்பமுள்ள துர்நாற்றமுள்ள வாயுக்களைப் பீச்சி அடிக்கிறது. தன் வயிற்றின் இருவேறு அறைகளில் ஹைடிரோக்வினைன் மற்றும் ஹைடிரஜன் பெராக்சைடு வினையாற்றிகளைச் சேமித்து வைக்கிறது. சேமித்து வைக்கப்பட்ட வேதிப் பொருட்கள் ஆவியாகிவிடாதபடி தடுப்பான் ஒன்றையும் பயன்படுத்துகிறது.



இந்த அறிவியலாளன் வண்டு, தான் உயிர் வாழ்வதற்கென இம்முறையைத் தானே உண்டாக்கிக் கொண்டதென்பது கொஞ்சமும் நம்புவதற்குரியதாயில்லை. எத்தனை வண்டுகள் தங்கள் தற்காப்பு



முறைகளை உருவாக்கி இப்படிக் காத்துக் கொள்கின்றன?

ஒரு வண்டை நோக்கி இரை கொல்லி ஒன்று நெருங்கி வரும்போது, சேமித்து வைத்துள்ள வேதிப் பொருட்களை இரு குழாய்களுக்குள் செலுத்துகிறது. ''தடுப்பானுக்குத் தடுப்பான்'' ஒன்றை, சரியான நொடிப் பொழுதில் இவ்வேதிப்பொருட்களோடு சேர்ப்பதால், தடுப்பானின் கிரியை நடுநிலைக்குக் கொண்டு வரப்போகிறது. ஆகவே இரு வேதிப்பொருட்களும் விரைவாக வினையாற்றி, இரைகொல்லியைத் தாக்குமளவிற்கு மிக அதிகமான அளவிற்கு வெப்பமும் சத்தமும் வெடிக்கிறது. குழாய்கள் சுழலும் தன்மையுடையனவாயிருப்பதால், கொதிக்கும் வேதிப்பொருள்களை இரைகொல்லியின் மீது பீச்சியடிக்கிறது. சிலவகை வண்டுகள் நொடிக்கு 368 - 735 அதிர்வுகளாக, ஜெட் விமானம் பீச்சியடிப்பது போல் வேதிப்பொருள்களைப் பீச்சியடித்து இரைகொல்லியைத் தாக்கி தப்பித்துக்கொள்கின்றன.

இந்தத் தற்காப்பு முறைக்கான பகுதிகள் வண்டின் உடலில் அமைக்கப்பட்டிருப்பதற்குப் பரிணாமக் கொள்கை எந்த விளக்கமும் கொடுக்க முடியவில்லை. மறுபடியும் கூறுகிறேன் - இந்த அற்புதமான படைப்பில் கூரிய மதியுடைய வடிவமைப்பாளரின் கைவண்ணம் தெளிவாக வெளிப்படுகிறது என்ற உண்மைக்கு யாரும் கண்களை மூடிக்கொள்ள முடியாது. ஆதியாகமம் இவ்வாறு கூறுகிறது.

"தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான..... எல்லாவற்றையும் உண்டாக்கினார், தேவன் அது நல்லது என்று கண்டார்".

இவ்வகை வண்டுகளைப் படைக்கும் பொழுது எவ்வித ஆய்வுக்கூட விபத்துகளும் ஏற்படவில்லை என்பது திண்ணம். அவற்றின் பகைவர்களை மட்டுமே அவை அச்சுறுத்தும்.



# கீழ்ப்படிதல் அல்லது அடங்கியிருத்தல்

## (சிந்தனை)

தனி மனிதனின் உரிமைகள் முதன்மையான முக்கியத்துவம் நம் நவீன சமுதாயத்தில் பெறுகிறது. பெரும்பாலும் இது சமுதாயத்தின் சீரழிவுக்குக் காரணமாயுள்ளது. இயேசுவின் பணியாளர்களாகிய நாம் கொண்டிருக்க வேண்டிய வித்தியாசமான கண்ணோட்டத்தைப் பற்றித் தெளிவாய் இருக்கவேண்டும்.




**நம் குணாதிசயங்களுக்கு அடிப்படையானவை**

நம் ராஜ்யமும் நம் ராஜாவும் இந்த ஒழுங்கில் அமைபவர்களல்ல. தவறான சிந்தனை மற்றும் தவறான மனப்பான்மைகளில் மாட்டிக்கொள்ளாதபடி நாம் மிக விழிப்புடன் காத்துக்கொள்ளவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொன்றிலும், நம் வேலையிடங்களானாலும், சத்தியத்தோடு தொடர்பில்லாத சந்தர்ப்பங்களானாலும், அல்லது நம் ஆவிக்குரிய குடும்பமானாலும் சரி, எப்படியிருந்தாலும் நாம் கைக்கொள்ளும் தனித்தன்மை வாய்ந்த கொள்கைகள் மற்றும் கண்ணோட்டங்களை வெளிப்படுத்தும் முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்பது நமக்குத் தெரியும். இது ஏதோ ஆண்டவருக்கு சாட்சியாயிருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. இது வாழ்க்கையின் ஒரு முக்கியமான பகுதி என்பது உண்மை யென்றாலும், இது இன்னும் ஆழமானதும் பல காரியங்களை உள்ளடக்கியதும் தான். பவுல் சொன்னபடி, "ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 14:8)

நாம் எப்படி சிந்திக்கவேண்டும், நடக்கவேண்டும் என்பதற்கான சட்டம் யாது? "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்". (எபேசியர் 5:21). நாம் விசுவாச குடும்பத்தோடு மட்டும் நம் நடத்தை இவ்வசனத்திற்கேற்றாற்போல்

இருக்கலாம் என இந்தக் கட்டளையை ஒரு வரையறைக்குட்படுத்த முயலலாம். ஆனால் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களோ இக்கொள்கையை இன்னும் பரவலாகக் கைக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஆள்பவர்கள் (நாம் விதிவிலக்காக எதையும் கூறமுடியாது. பொல்லாத அரசனான நீரோ போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் பவுல் இப்படி எழுதுகிறார். இக்கால அரசுகள் எவ்வளவு கெட்டுப்போயிருக்கின்றன) **நம்மைப் பணியில் வைத்திருப்போர்** (அக்காலத்தில் எஜமான் - அடிமை என்னும் உறவு போன்றது), மற்றும் **சத்தியத்தைக் கைக்கொள்ளாத கணவன்மார்.** ''மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.'' (அப்போஸ்தலர் 5:29) என்ற பேதுருவின் கூற்றை நாம் நினைவுக்குக் கொண்டு வந்தாலும், அதைச் சரியான சந்தர்ப்பத்தில் தான் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய கொள்கைகளைக் கைவிட்டு உலகக் கொள்கைகளைப் பின்பற்றும்படிக் கேட்டுக் கொள்ளப்படும்போது பேதுரு கூறியதைப் பின்பற்ற வேண்டும்.

## கீழ்ப்படிதல் அல்லது அடங்கிப்போதல் எல்லாராலும் விரும்பப்படுவது இல்லை.

கீழ்ப்படிதல் அல்லது அடங்கிப்போதல் என்னும் கருத்து நவீன சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒன்று. நாமும் கூட, இக்கருத்தின்படி நாம் ஒன்றும் செய்யாமல் அமர்ந்திருந்து பிறர் நம்மை ஏறி மிதிக்க அனுமதிக்கிறோம். இல்லை இது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. உண்மையில் கீழ்ப்படிதல் என்ற நிலையில், நாம் எப்படி சிந்திப்பது, மற்றும் எப்படி நடந்து கொள்வது என நாமே தெரிந்து கொள்கிறோம். இப்படி அன்பின் ஆவியினால் தெரிந்து கொள்கிறோம்.

''...........தீர்மானித்துக் கொள்ளுங்கள்.... நாடக்கடவோம்'' (ரோமர் 14:13,19). பேதுரு தமது முதலாம் நிருபத்தில் நாமே பிறருக்குக் கீழ்ப்படிவதற்குத் தீர்மானம் செய்கிறோம். நம் வாழ்க்கையில் கஷ்டமாக சந்தர்ப்பங்களிலும் கூட - நம் மேலதிகாரி நம் மேலும் கடினமாக தாக்கத் தீர்மானம் செய்கிறார். உள்ளூர் அதிகாரி ஒரு குறிப்பிட்ட வேகத்தை மீறக்கூடாது என யாரும் கைக்கொள்ள முடியாத உத்தரவைப் போடுகிறார். (அதை யாரும் பின்பற்றுவது இல்லை). அரசாங்கம் ஒரு பெரிய தொகையை வரியாக நம்மேல் சுமத்துகிறது. நம்மோடு வேலை செய்பவர் நம் வேலை அல்லது நடத்தை பற்றி மேலதிகாரியிடம் புகார் செய்கிறார். ஒருவரின் கணவர் நம் விருப்பத்துக்கு மாறான தீர்மானம் செய்கிறார்.

கீழ்ப்படிதல் அல்லது அடங்கியிருத்தல் என்னும் கொள்கை தாழ்மை என்னும் கொள்கையோடு இணைந்தது. அது, பிறரோடு நாம் செயல்படும் போதுள்ள, உள்ளான தாழ்மையுள்ள மனப்பான்மையின் வெளிப்பாடு ஆகும். ஒரு தாழ்மையுள்ள மனப்பான்மையையும் பிறருக்குக் கீழ்ப்படிந்து அடங்கும் செயல்களாலும், பிதாவோடும் நம் ஆண்டவர் இயேசுவோடுமுள்ள நம் உறவுகளில் இந்தக் கொள்கைகள் செயல்படும்வரை நாம் கற்றுக்கொள்கிறோம். தாழ்மையுள்ள மனப்பான்மையைக் கொண்டிருப்பதாலும், நாமாக முன்வந்து தேவனுடைய சித்தத்திற்கு நம் வாழ்க்கையில் கீழ்ப்படிந்து போவதாலும், அதே போல் மற்ற மக்களிடம் நடந்து கொள்ளும் நிலைக்கு ஆயத்தமாகிறோம்.



## முறுமுறுப்பதற்கான காரணங்கள்

நம் ஒவ்வொருவருக்கும் தகுதியான ஒன்றை பவுல் பிலிப்பியர் 2:5-16 கூறுகிறார்: ''கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்''.

தாழ்மையான மனப்பான்மைக்கும் கீழ்ப்படிந்து அடங்கும் செயல்களுக்கும் எவ்வளவு மாறானதாகவும் குறைகூறி முறுமுறுப்பது எவ்வளவு சுலபமானதாகவும் நாம் உணர்கிறோம். கால நிலை பற்றி முறுமுறுப்பது அடிக்கடி நடக்கிறது. நாம் ஒத்துக்கொள்ளாத ஒன்றை ஒருவர் செய்தது அல்லது நாம் மரியாதையாக நடத்தப்படவில்லை என நினைக்கும் சந்தர்ப்பம் வேதாகம வகுப்பு சொற்பொழிவின் தரம் - இப்படி நாம் சொல்லிக்கொண்டே போகலாம். நீங்களும் நிறைய எடுத்துக்காட்டுகள் இதுபோன்று தரலாம். இப்படி நாம் நடந்து கொள்வதால், நாம் உண்மையில், உலகிலுள்ள மற்றவர்களை விட வித்தியாசமானவர்கள் அல்ல என்று காண்பிக்கிறோம். ஒருவேளை, முறுமுறுத்த இஸ்ரவேலர் சங்காரதூதன் முன் விழுந்தது போல் நாமும் விழக்கூடியவர்களாகிவிடுவோம். (1கொரி 10:10)

## விசுவாசி வித்தியாசமானவனாக இருக்கவேண்டும்.

காரியங்கள் நம் வழியில் நடக்கவில்லை. அல்லது நம் விருப்பத்திற்கேற்றவாறு இல்லை என்பதோடு பெருமையும் தன்னலமும் தந்திரமாகத் தலையைக் காட்டுகின்றன. நாம் நம் இலக்கை நோக்கிச் செல்லும் முனைப்பை இழந்துவிட்டோம். நம்மைச் சுற்றியிருப்போர் நம் மனப்பான்மைக்கும் அவர்களுடைய மனப்பான்மைக்கும் எந்த வேறுபாட்டையும் காண்கிறதில்லை. நம் வாழ்வில் தேவன் தந்தவைகளுக்காக நன்றியாயிருப்பதினின்றும் நாம் திசை மாறிவிட்டோம். மோசமான சந்தர்ப்பங்களில் கூட அவரின் பராமரிப்பை நாம் நினைக்க வேண்டும். ஒரு தாழ்மையுள்ள ஆவியோடு, அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிந்து அடங்குகிறோம். அற்ப ஏமாற்றங்கள், மோசமான கால நிலை போன்றவற்றிலும் கூட நாம் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக என்ன கற்றுக்கொள்ளக்கூடும் என நாம் நம்மையே கேட்க வேண்டும்.

தாழ்மை மற்றும் கீழ்ப்படிந்து அடங்குதல் என்னும் கொள்கைகள் உண்மையிலேயே நம் நடைமுறை வாழ்க்கையில் கையாளக் கடினமானது தான். ஏனெனில் நம் பாவ மனுஷீக சுபாவத்தின் வழிகளில் நடந்து நமது உரிமைகளுக்காக நிற்க விரும்புகிறோம்.

நாம் பின்பற்றவும், கற்றுக் கொள்ளவும் வேதாகமத்தில் எத்தனையோ எடுத்துக் காட்டுகள் உள்ளன. அவர்களில் மகத்தானவர் கர்த்தராகிய இயேசு. அவர் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்'' (பிலிப்பியர் 2:8) மிக மோசமான சந்தர்ப்பங்களிலும் கூட பொல்லாத மனிதர்களின் செயல்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து அமைதலாயிருந்தார். நம்மில் பெரும்பாலானோர் பட்ட கஷ்டங்களைக் காட்டிலும் மிக மிக மோசமான துன்பங்கள் அவை. ஏனென்றால் அவர் தாம் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். (எபிரேயர் 5:8) அவர் பிதாவின் சித்தத்தின்படி கீழ்ப்படிந்து அடங்கினார். ''என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது'' (லூக்கா 22:42)

# அத்திமரத்தின் உவமையும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்



இந்தக் குறிப்பிட்ட உவமையானது மற்ற பல உவமைகளைக் காட்டிலும் சற்று வித்தியாசமானதே. இது தேவனுடைய ராஜ்யத்தின் தொடர் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாகவோ, இயேசுவின் சன்மார்க்க போதனைகளின் ஒரு பகுதியாகவோ இல்லை. மாறாக, இவ்வுவமையின் முதற்பகுதி செயல்வடிவத்திலுள்ள ஒரு உவமையாகவும், இரண்டாம் பகுதி அவர் கூறிய உவமையாகவும், ஒரே செய்தியை உள்ளடங்கிய இரு பகுதிகளாக உள்ளன.

ஒரு சமயம் இயேசுவும் சீஷர்களும் எருசலேமுக்குப் பயணித்தபோது நடந்ததை மத்தேயு இங்ஙனம் எழுதுகிறார்.

“அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற்குப் போய், அதில் இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல், இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்.” (மத்தேயு 21:19)

மேலோட்டமாகப் பார்த்தால் இயேசுவானவர் இப்படிக் கூறுவது விந்தையாகத் தெரிகிறது. இருப்பினும், இச்சம்பவத்தை, ஒரு செய்து காட்டப்பட்ட உவமையாகவும் அதன் இரண்டாம் பகுதி மறுநாளில் நடப்பதாகவும் கொண்டால், மறைந்து கிடைக்கும் அதன் அர்த்தத்தை நாம் காணலாம்.

“மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப் போயிருக்கிறதைக் கண்டார்கள். பேதுரு நினைவு கூர்ந்து, அவரை நோக்கி, ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.” (மாற்கு 11:20-21)

இயேசுவின் இச்செயல் குற்றம் காணக் கூடியதென விமர்சிக்கப்படினும், இப்பொழுது இது நம் பிரச்சனையல்ல. இன்னும் ஆழ்ந்து பார்க்கப்போனால், இச்சம்பவம் கூறும் பொருள் தான் என்ன? வழியருகே உள்ள அத்திமரம் இஸ்ரவேல் (இஸ்ரேல்) தேசத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கனியை அல்லது குறைந்தபட்சம் கனிகளின் அறுவடைக்கான அறிகுறிகளை எதிர்பார்த்து இயேசுவானவர் தம் மக்களிடம் வந்தார். உண்மையில் இதன் பொருள் யாதெனில், தம் வருகைக்காகக் காத்திருக்கும் மக்களை, நற்பண்புகளைத் தம்மில் வெளிப்படுத்தும் மக்களை, தேவ பயமுள்ள, நேர்மையும் தாழ்மையுமுள்ள மக்களை அவர் தேடி வந்தார். ஆனால்



அவர்களிடம் மேட்டிமையையும் பெருமையையுமே கண்டார்.

ஆலயப் பிராகாரங்களில் தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக, பணம் சம்பாதிப்பதிலேயே குறியாயிருந்த மக்களைக் கண்டார். இஸ்ரேல் எனும் மரத்தின் வேர் முதலாய் ஏற்கனவே பட்டுப்போயிற்று. ஏறத்தாழ உயிரற்ற நிலைதான். இதையே அடுத்துவரும் தீர்க்கதரிசனமாக ஒலிவமலையில் அறிவித்தார்.

“எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். பூமியின் மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின் மேல் கோபாக்கினையும் உண்டாகும். பட்டயக்கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக்குள்ளும் சிதறப்பட்டுப் போவார்கள். புற ஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.” (லூக்கா) 21:20,21-24)



இந்த முன்னறிவிப்புகள் முப்பது ஆண்டுகளுக்குள்ளேயே நிறைவேறி விட்டன. எப்படியெனில், ரோமப் போர்வீரர்கள் நகரத்தைத் தாக்கி அழித்தனர். யூதர்கள் உலகெங்கும் சிதறிப்போதலும் ஆரம்பமாயிற்று.

எருசலேமின் அழிவைக்குறித்தும், தமது இரண்டாம் வருகையைக்குறித்தும் ஆண்டவர் கூறிய முன்னறிவிப்புகளின் இறுதியில், அத்திமர உவமையின் இரண்டாம் பகுதி வருகிறது.

“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருவதைக் காண்பார்கள். அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார். அத்தி மரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.” (லூக்கா 21:27,29-31)

ஆகவே, அத்திமரத்தின் வளர்ச்சி எதைப்பற்றியதாயிருப்பினும், அது அதிசீக்கிரத்தில் நிகழப்போகும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடையாளம் என நாம் அறிவு பூர்வமாக நம்பலாம். நாம் ஏற்கனவே பார்த்தபடி, அத்திமரம் இஸ்ரேல் ஜனத்தின் அடையாளமாயிருக்கிறது. இஸ்ரேல் ஜனம் ஜீவனற்ற மரண நிலையினின்று உயிர்பெற்றெழும்பும்போது, அதன் வளர்ச்சி உறுதியான அதைத் தொடர்ந்து, வேறுபல நாடுகளும் தங்களின் சுதந்திரத்தை அறிவிக்கும்போது, இயேசுவின் இரண்டாம் வருகை சமீபமாயிற்றென நாம் உறுதியாக நம்பலாம்.

இந்த நூற்றாண்டின் செய்திகளும் மேலே சித்தரிக்கப்பட்டவற்றிற்கு

விடைகளாகவே அமைந்துள்ளன. யூதர்கள் பல நாடுகளுக்குச் சிதறிப்போய், சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பின்னர், தொடர்ந்து தங்கள் நாட்டிற்குத் திரும்பி வந்த வண்ணம் உள்ளனர். 1948ல் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அதன்பின் அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் தொடர்ச்சியாக வளர்ந்து இன்று இஸ்ரேல் நாடு உலகின் முன்னோடி நாடுகளுக்கு இணையாக நிற்கிறார்கள். அத்திமரமாகிய இஸ்ரேல், கடந்த நூற்றாண்டில் திட்டமானதொரு எழுப்புதல் அடைந்துள்ளது. துளிர்த்து வரும் கிளைகள் 'மரம்' இன்னும் வளரும் என்பதற்கும் 'வசந்தகாலம்' என்பது தேவனுடைய ராஜ்யம் விரைவில் நிறுவப்படும் என்பதற்கும் அடையாளமாயிருக்கின்றன.

இருப்பினும் இயேசுவின் வருகையும் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலும் மெய்யாகவே நிகழும்போது புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட இஸ்ரேல் தேசம் இன்னும் ஒருமுறை கடைசியாக அழிக்கப்படும் நிலை ஏற்படலாம். வேதத்திலுள்ள தீர்க்க தரிசிகளின் செய்தியும், மீண்டும் தோன்றிய இஸ்ரேல் தேசத்தின் திடீர் அழிவைத் தீர்க்கமாகவே முன்னறிவிப்பதாயுள்ளது.

அவர்கள் பட்டணங்கள் பிடிப்பட்டு, அங்கு வாழும் மக்கள் அழிக்கப்பட்டுப் போகும் அந்நாள் இஸ்ரேலுக்கு ஒரு துக்ககரமான கறுப்புநாள் தான். ஆனால் அதன் விளைவு தெளிவாயுள்ளது. இந்த பயங்கரமான படையெடுப்பின்போது, இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து பூமிக்குத் திரும்ப வருவார். அவர்கள் பகைஞரிடமிருந்து அவர்களுக்கு மீட்பு அல்லது இரட்சிப்பை மட்டுமல்ல, அவர்கள் பாவங்களுக்கான மன்னிப்பையும் அவர் கொண்டு வருகிறார். இந்த சம்பவங்களின் தொடர்வரிசையை நாம் எளிதில் பகுத்துக் கூற முடியும்.

a. நீண்ட காலமாய் சிதறடிக்கப்பட்டிருந்த இஸ்ரவேல் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது.

b. தங்கள் சாதனைகளில் பெருமிதம் கொள்ளும் குறிப்பிடத்தக்க வல்லமையுள்ள ஒரு தேசமாக இஸ்ரேல் மாறுகிறது.

c. பகையுணர்ச்சி மிக்க, வலிமை வாய்ந்த சக்தி ஒன்றின் படையெடுப்பு.

d. ஏறத்தாழ முழு இஸ்ரேலின் அழிவு.

e. இஸ்ரேல் மக்களில் மீந்தவர்கள் மனந்திரும்புதல்

f. இஸ்ரேலில் ஒரு மாபெரும் பூமி அதிர்ச்சி தோன்றி, படையெடுத்து வந்த ராணுவத்தை அழிக்கும்.

g. இயேசு கிறிஸ்துவின் மீண்டும் வருதல்.

மேற்கண்ட வரிசையில் கடைசியாகக் குறிக்கப்பட்டதைத் தான் நாம் இப்போது கவனிக்கவேண்டியது அவசியமாயுள்ளது. ஏனெனில் உலகை மாற்றப்போகும் இந்த மாபெரும் நிகழ்வுக்கு முற்செயல்களாக (முன் நிகழ்வுகளாக) உள்ளன. பூமி அதிர்ச்சியில் தேவனுடைய வல்லமை விளங்கும்போது, வானத்தை நோக்கிப் பார்க்கும்படி விசுவாசிகளுக்கு இயேசு கூறுகிறார். ஏனெனில் அவர்கள் மீட்பு சமீபமாயிருக்கிறது. இயேசு வானிலிருந்து பூமிக்கு வருவதை அவர்கள் காணப்போகிறபடியால், அவர்கள் மேலே நோக்கிப் பார்க்கவேண்டும். ஆண்டவர் தாமே இதைக் குறித்துத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.



"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள்." (லூக்கா 21:25-27)

வேதத்தில் பல பகுதிகளில் இச்சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் மிகத் தெளிவானவை கீழே தரப்பட்டுள்ளன.

"இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக்காணும்." (வெளிப்படுத்தல் 1:7)

"தேவனை அறியாதவர்களுக்கும்... நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது" (2. தெசலோனிக்கேயர் 1:7-8)

"மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்" (லூக்கா 17:24)

இயேசு திரும்ப வருகிறதான சம்பவம் உலகத்தை மாற்றிவிடும். கிறிஸ்துவின் ராஜரீக ஆளுகையைக் கொண்டுவரும். எருசலேமில் தொடங்கி, அவருடைய ராஜ்யம் அனைத்து தேசங்களுக்கும் பரவி, சமாதானத்தையும் நன்மையையும் கொண்டுவரும். நிலப்பரப்பிலும் மாற்றங்கள் ஏற்படும். பாலைவனத்தில் சாகுபடி செய்யப்படும். நீரோடைகள் ஒரு புதிய வேளாண்மைப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும். மேலும் பஞ்சம், ஏழ்மை மற்றும் இவற்றோடு இணைந்து வரும் அனைத்துப் பிரச்சனைகளும் நீக்கப்பட்டுப்போகும்.

நாம் ஏற்கனவே பார்த்தப்படி, அத்தி மரம் இஸ்ரேல் தேசத்துச் சின்னங்களுள் ஒன்றாகும். மேலும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இஸ்ரேல் தேசம் உயிர்பெற்றெழுந்ததையும் கண்டோம். உவமையில் கூறப்பட்ட அத்திமரம் உயிர்பெற்று இலைகளும் துளிர்த்தாயிற்று. ஆகவே "மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படி" மரத்தைச் சுத்தம் செய்தலும் சீக்கிரம் நிகழும் என அறிவோம்.

இதற்கிடையில் ஆண்டவர் வானத்திலிருந்து பூமிக்கு வருகையில் நாம் ஆயத்தமாயிருக்கும்படி நம்மை ஆயத்தம் செய்வது அவசியமாயிருக்கிறது. தமது இரண்டாவது வருகையைப் பற்றிக் கூறிக்கொண்டே வரும்போது, 'அவர் வருகையில்' மக்கள் தூங்குகிறவர்களாகக் காணப்படாதபடிக்கு விழித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டுமென, தம் உரையைக் கேட்டவர்களுக்கும் வாசிப்பவர்களுக்கும் வற்புறுத்திக் கூறுகிறார்.

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்." (லூக்கா 21:36).

# வாய்ப்புகளை நழுவ விடாதே



ஒரு கனிவான வார்த்தை, பாராட்டு, நன்றி, அல்லது புகழ்ந்து ஒரு வார்த்தையை நாம் பழகும் மக்களுக்கு அளிக்கும் வாய்ப்புகளை நாம் ஒரு போதும் நழுவ விடக்கூடாது. நம் அன்புக்குரியவர்கள், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் சபை மக்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அன்பான வார்த்தை கூறும் நல்ல தருணத்தை நம்மை விட்டு நழுவ விடக்கூடாது. தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் பழகும் மக்களிடம் தேவனுடைய அன்பைப் பிரதிபலிக்க நாம் என்ன செய்யவேண்டும். என 1. கொரிந்தியர் 13 நமக்குச் சொல்லுகிறது. நாம் பொறுமையாய், கனிவாய் இருக்க வேண்டும். பொறாமை உடையவர்களாய் கர்வம் பிடித்தவர்களாய் முரட்டுத்தனமாய் இருக்கக் கூடாது. நம் வழிகளையே முன்னிறுத்தி அழுத்தம் கொடுக்கக் கூடாது. சிடுசிடுக்கக் கூடாது. வெறுப்படையக் கூடாது. தீமையில் சந்தோஷம் படாமல் நன்மையில் சந்தோஷப்படவேண்டும். நம் பரமபிதாவின் கற்பனைகளின் மேல் நம் உறவுகள் அல்லது தொடர்புகள் கட்டப்பட்டதாயிருப்பின், அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும்!

தேவனுக்கு முன்பாக, நம் தொடர்புகள் சரியாக இருக்கும் போது, இக்காலங்களில் நடப்பது போல எதிர்பாராத விதமாய் மரணம் சம்பவிக்கும்போது, துக்கத்திலிருந்து மீண்டெழும்புவது எளிதாயிருக்கும். மரித்துப் போனவருக்குச் செய்ய வேண்டியிருந்த நன்மையைச் செய்யாமல் விட்டு விட்டோமே என்ற வருத்தமும் விசனமும் நமக்கு இருக்காது. முக்கியப் படாத வேலை இருக்காது.

ஒருவர் இறந்த பிறகு, அவரின் முடிவு பெறாத வேலையைச் சரி செய்வது



உளவியல் ரீதியாகப் பிரேதப் பரிசோதனை செய்வது போன்றது. இது மிகமிக கடினமானது. முடிவு பெறாத பிரச்சினைகளைத் தீர்க்க, மரித்தவர் இப்போது உன்னுடன் இல்லை. இது உன்மேல் தேவையற்ற சுமையையும் மன எழுச்சியையும், ஏற்கனவே உனக்கிருக்கும் துக்க சுமையை மேல் மேலும் சுமத்துகிறது.

ரோமர் 12:10ன் படி நம் உறவுகள் சரியாக இருக்கும்போது - அதாவது சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருந்து, கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளும்போது நாம் நம் குணசீலத்தைக் கட்டி வளர்க்கிறோம். அது ஒரு நல்ல ஒழுக்கமான பயிற்சி. அதனால், ஒவ்வொரு நாளையும் நாம் முடிக்கும்போது, ஜெபத்தில் நமது எல்லா தொடர்புகளும் அவருடைய வழிகளின்படியே கையாளப்பட்டிருக்கின்றன என்று தேவனிடம் சொல்லக்கூடும்.

சமீபத்தில் (1/2003) ஒரு நிமிட தியானத்தில் பாப்லாயிட் எனும் சகோதரன் ஜன் ருஹேயின் கூற்றை மேற்கோள் காட்டுகிறான். உன் கடந்த காலத்திற்கு சற்றும் நேரம் கொடுக்காதே, ஐந்து நிமிடத்திற்கு முன் நடந்ததைக் கூட உன்னால் மாற்ற முடியாது. எவ்வளவு தான் முயன்றாலும் இப்பொழுதை நாம் பிடித்து வைத்துக் கொண்டிருக்க முடியாது. வெகு சீக்கிரத்தில் அது அப்பொழுது இருந்தது என்றாகி விடும். நாம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் சந்தோஷத்தைப் பூமியில் சீக்கிரத்தில் நிறுவப்படப் போகிற தேவனுடைய ராஜ்யத்தை முன்வைத்து இங்கே, இப்போது வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே நாம் பிறரோடு இடைபடும் எல்லா நேரங்களிலும் ஒரு கனிவான வார்த்தை, கனிவான ஒரு செயல் செய்யாமல், வாய்ப்புகளைத் தவறவிட்டு விடக்கூடாது. நம் பரம பிதா தினந்தோறும் நம்மேல்லார் மேலும் கனிவையும் தயவுகளையும் பொழிந்தருளுவதை நம் செயல்கள் பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுது நம் அன்புக்குரிய யாராவது ஒருவர் மரிக்கும்போது விசனம் குறைவாக இருக்கும்.

**டெபோரா கார்ப்மன்**

